






ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகத்தின் சார்பாக தஞ்சை மத்திய தபால் நிலையம் அருகில் ”நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், மாவட்டக் கழக செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., அண்ணாதுரை எம்.எல்.ஏ., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர்மேயர்சண்.இராமநாதன், துணைமேயர்திருமதி.அஞ்சுகம்பூபதி ஆகியோரும் அணி அமைப்பாளர்களும்கலந்துகொண்டார்கள்.



மாணவர்களை மட்டுமின்றி,பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, திருவாரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி,மாணவரணி, மருத்துவரணி சார்பில், மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமையில் திருவாரூர் இரயில் நிலையம் எதிரில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போர் போராட்டத்தை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கிவைத்தார். இதில் இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



மாணவர்களை மட்டுமின்றி,பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற தமிழ்நாடு ஆளுநரையும் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி,மாணவரணி,மருத்துவரணி சார்பில், மாவட்டக் கழக ச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் புதிய பேருந்து நிலையத்தில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது . இதில் பல்லாயிரக்கணக்கானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.




